IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.52/2020
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வெங்கடேஷ் | Caste | : | |
| Father Name | : | மணி | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 01st day of December, 2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– தொடர்ச்சி

1. தாவா சொத்தின் 4 எல்லைகளும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். குடியாத்தம் ரோட்டிற்கு தெற்கு, பிரதிவாதி ஆறுமுகம் சொத்திற்கு வடக்கு, மணி சொத்திற்கு மேற்கு, செந்தில் சொத்திற்கு கிழக்கு என்று சொன்னால் சரிதான். 03.07.2020-அன்று உருவாக்கப்பட்ட கிரைய பத்திர ஆவணம் மற்றும் பட்டா எண்.541 முன்னிலைக்கு தான் நான் தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்று சொன்னால் சரிதான். 17.09.2007 அன்று கோபால் அவர்களால் முதலாம் பிரதிவாதியான ஆறுமுகத்திற்கு கொடுத்த கிரைய பத்திரத்தின் ஆவணம் வா.சா.3 என்று சொன்னால் சரிதான். அப்பொழுது கோபால் அவர்களுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் எழுதி கொடுத்தார். வா.சா.3 ன் அடிப்படையில் தான் ஆறுமுகத்திடம் இருந்து வா.சா.2 -ஆனது பிரபுவால் அதாவது 3 ஆம் வாதியின் கணவரால் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

2. செந்தில் இடத்திற்கு கிழக்கு, மணி இடத்திற்கு மேற்கு, , ரோட்டிற்கு தெற்கு, ஆறுமுகத்தின் இடத்திற்கு வடக்கு இதன் மத்தியில் கிழக்கு-மேற்காக 10. 1/2 அடி, வடக்கு-தெற்காக 40 அடி இதன் மத்தியில் 420 சதுரடி வா.சா.2 மன்றும் 3 ல் குறிப்பிட்டுள்ள சொத்து ஆகும் என்று சொன்னால் சரிதான். வா.சா.2 மற்றும் 3-ற்கு உண்டான சொத்திற்கு பின்

பகுதி ஆறுமுகம் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அது ஆறுமுகத்திற்கு சொந்தமான சொத்து என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் தாவா சொத்தின் அட்டவணையில் வடக்கு-தெற்கு 49 அடி என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

3. வா.சா.2 மற்றும் 3 ன் படி வடக்கு-தெற்கானது 40 அடிதான் என்றாலும் ஆனால் வா.சா.1-ல் 49 அடியாக வடக்கு-தெற்கு என்று தவறாக குறிப்பிட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. சரியாக தான் குறிப்பிட்டோம். எதன் அடிப்படையில் நாங்கள் 49 அடி என்று குறிப்பிட்டோம் என்று சொன்னால் சர்வேயரை கூட்டி வந்து அளந்து பார்த்தோம் அதனால் குறிப்பிட்டோம். 30.06.2020 முதல் இன்றைய தேதி வரை எனது பெயரில் பட்டா, சிட்டா எதுவும் மாறவில்லை என்று சொன்னால் மாறிவிட்டது. அவ்வாறு மாறியிருந்தால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் ஆவணம் மாறாததால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. நான் வா.சா.4-ஆனது ரங்கநாதன், மணி, கோபால் ஆகியோர்கள் பெயரில் உள்ள அதாவது என்னுடைய முன்னோர்கள் பெயரில் உள்ள ஆவணம் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)

INBARANI Digitally signed by INBARANI

DISTRICT MUNSIF
KATPADI